பதுளை பிரதேச சபை - 2022

------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பதுளை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பதுளை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் மொத்த சொத்துக்கள் ரூபா 139,199,915 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறு மொத்த உரிமைகள் மற்றும் பொறுப்புக்களின் மீதி ரூபா.139,731,405 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்ட திரண்ட நிதியத்தை முன்கொண்டு வரும்போது ரூபா 9,967,555 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டமை மீளாய்வாண்டின் போது சரிசெய்யும் போது ரூபா 996,755 மாத்திரம் தொங்கல் வரவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | பிரதேச அபிவிருத்தி உதவி செயற்றிட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் மொத்த பெறுவனவுகள் ரூபா 11,400,000 மற்றும் மொத்தக் கொடுப்பனவுகள் ரூபா 10,883,507 என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பிரதேச அபிவிருத்தி உதவி செயற்றிட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக கிடைக்க வேண்டிய நிறுத்திவைத்தல் பணம் ரூபா 755,527 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | 2016 ஆம் ஆண்டின் போது புறநெகும செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட சபையின் கட்டிடத்தில் ரூபா 38,122,896 பூர்த்தி வேலைப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படும். | - மேற்படி - |
| (ஊ) | முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச அபிவிருத்தி உதவி செயற்றிட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட உணவகக் கட்டிடம், மலசல கூடம் மற்றும் வேலிக்கான பெறுமதி ரூபா 13,137,223 மூலதானப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 33,039 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (ஏ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு மூன்று உத்தியோகத்தர்களுக்கான இடர் கடன் ரூபா 300,000 கடன்கொடுத்தோராக ஒதுக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | மீளாய்வாண்டின் போது கழிவுப்பொருள் வரி வருமானம் ரூபா 70,000 அதிகரித்து சிட்டையிடப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஒ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 500,000 ஆக இருக்க வேண்டிய போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 373,380 ஆக காண்பிக்கப் பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஓ) | மீளாய்வாண்டின் போது பிரதேச அபிவிருத்தி உதவி செயற்றிட்டத்தில் வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காக சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட ரூபா 372,505 பிரதேச அபிவிருத்தி உதவி செயற்றிட்டத்தில் இருந்து கிடைக்க வேண்டியதாக கணக்கீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஔ) | மீளாய்வாண்டின் போது பிரதேச அபிவிருத்தி உதவி செயற்றிட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,000,000 ஆன 69 சூரியகல வீதி விளக்குகள் நிதிக் நிலைமைக் கூற்றில் மூலதனச் சொத்தாகக் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 07 கணக்கு மீதிகள் பொதுப் பேரேட்டின் பேரேட்டுக் கணக்கின் மீதிகளுடன் ரூபா 2,883,336 இனால் இணங்கியிருக்கவில்லை. | பொதுப் பேரேட்டின் பேரேட்டுக் கணக்குகள் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதிகள் நேரொத்த அறிக்கையின் பிரகாரம் வேறுபாடுகளை வெளிப்படுத்தி மீதியை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 07 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகைக்கும் உபயோகப் புத்தகங்கள் மற்றும் உபயோக ஆவணங்களின் கூட்டுத் தொகைகளுக்கும் இடையே ரூபா 25,887,740 வேறுபாடு காணப்பட்டது. | பதிவேடுகளை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுப்பெறுமதி ரூபா 5,264,647 ஆன காணியும் கட்டிடமும் மற்றும் இருப்பு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான உரித்து, நில வரைபடம், கையளித்தல் கட்டளை மற்றும் இருப்பு மெய்மையாய்வு அறிக்கை என்பன சமர்ப்பிக்காமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | உரித்துறுதியின் நில வரைபடம் மற்றும் கையளித்தல் கட்டளை பெற்றுக்கொள்வதற்கும் இருப்பு மெய்மையாய்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு போதியளவான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| 23 மற்றும் 24 (1) ஆம் பிரிவுகள் | சபைக்குரிய வீதிகளின் நிரந்தர அடையாளம் மற்றும் எல்லை குறிப்பிடப்பட்டு திட்டம் தயாரித்து அந்த வீதிகள் | எதிர்காலத்தின் போது பதிவேடுகளுக்கு கொண்டு வந்த அறிவித்தல் பிரசுரிப்பதற்கு | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் ஒழுங்கை வீதிகளின் பெயர் பதிவேட்டைக் காண்பிக்கும் கட்டளைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள முறையில் அறிவித்தல் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 180 மற்றும் ஊவா மாகாண பிரதம செயலாளரின் 2005 மார்ச் 24 ஆந் திகதிய 2/மூ/1 ஆம் இலக்க கடிதம் | பிணைவைக்க வேண்டிய 09 உத்தியோகத்தர்கள் பிணைவைத்திருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது பிணைவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிணைவைக்க வேண்டிய ஊழியர்களை பிணைவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை | | | |
| (i) | விதி 217 | பீ.எஸ். 46 படிவத்தின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான, சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற மற்றும் சபையினால் குடியிருப்பிற்கு எடுக்கப்பட்ட சகல காணிகளும் மற்றும் கட்டிடங்களும் தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகளை முறையாகப் பேணிச் செல்வதற்கு விடய உத்தியோகத்தருக்கு அறிக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ii) | விதி 218 | மீளாய்வாண்டிற்காக சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் மெய்மையாய்வு சபையின் மூலம் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மெய்மையாய்விற்காக குழு ஒன்று நியமிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வருடாந்தம் சொத்துக்களை மெய்மையாய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,969,396 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,516,208 ஆகும்.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 950,184 | 818,290 | 854,746 | (36,456) | 950,184 | 842,692 | 675,480 | 167,212 |
| (ii) | வாடகை | 1,200,000 | 1,489,804 | 1,699,850 | (210,046) | 1,200,000 | 1,540,840 | 1,234,150 | 306,690 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 585,000 | 585,000 | 500,000 | 85,000 | 750,000 | 710,000 | 642,580 | 67,420 |
| (iv) | ஏனைய வருமானம் | 3,021,520 | 2,664,989 | 2,123,061 | 541,928 | 3,021,520 | 3,233,113 | 1,792,357 | 1,440,756 |
| | மொத்தம் | 5,756,704 | 5,558,083 | 5,177,657 | 380,426 | 5,921,704 | 6,326,645 | 4,344,567 | 1,982,078 |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற நிலுவை முச்சக்கர வண்டிக் கட்டணம் ரூபா 135,980 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இடைக்கால விதி ஆளுநரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது அமுலில் இல்லாமையினால் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு வசதியீனமாக இருந்தது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடல் வேண்டும். |
| (ஆ) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரதரப்பினரிடம் இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டி இருந்த நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 3,035,149 மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 6,702,054 என்பன பெறப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான பட்டோலைகள் தயாரித்து உரிய நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் விரைவாக பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபையின் நிதஹஸ் ஆயர்வேத மருந்தகத்திற்கு மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக சபை நிதியத்தில் இருந்து நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்ததுடன் மருந்துக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட ரூபா 1,050,000 மருந்துகளில் 1510 நோயாளிகளுக்காக ரூபா 272,723 மருந்துகள் சிகிச்சை மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் பெப்ரவரி 11ஆம் திகதி முதல் நிரந்தர ஆயர்வேத வைத்தியர் ஒருவர் சேவையில் ஈடுபட்டிருக்கவில்லை. | நிரந்தர வைத்தர் ஒருவர் இல்லாமையினால் சபை நிதியத்தின் நிதி ஏற்பாடுகளில் மருந்துகளைப் பெற்றுக் கொள்ளாமல் மருந்துக் கூட்டுத்தாபனத்திலிருந்து வழங்கப்படுகின்ற மருந்துகள் மாத்திரம் நோயாளர்களுக்கு வழங்க வேண்டி ஏற்பட்டிருந்தமை. | பொது மக்கள் சுகநலன்களுக்காக சுகாதார சேவையை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் சபை நிதியத்திலிருந்து ரூபா 1,470,000 செலவில் 05 அறைகள் மற்றும் ரூபா 2,150,000 செலவில் கழிவுப் பொருள் தளத்தைச் சுற்றி வேலியும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.<br>வருடாந்தம் சேகரிக்கப்படுகின்ற 1,800 தொன் அளவிலான கழிவுப் பொருட்கள் உரிய நிலத்தில் முறையதாக அகற்றப்பட்டிருந்ததுடன் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாட்டிற்காக மூன்று தொழிலாளர்கள் கம்பெக்டர் வண்டி மற்றும் 02 டெக்டர் வண்டிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் சபை சேதனப்பசளை உற்பத்தி செய்திருக்கவில்லை.<br>நிர்மாணிக்கப்பட்ட கழிவுப் பொருள் தளம் கழிவுப்பொருட்களை வேறு பிரிப்பதற்கும், கூட்டுப்பசளை உற்பத்திக்கோ அல்லது ஏனைய ஆக்கபூர்வமான பணிகளிலோ ஈடுபடுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | உக்காத கழிவுப் பொருட்களை தனித்தனியாக களஞ்சியப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. உக்குகின்ற கழிவுப் பொருட்களை சேதனப் பசளைக்கு ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | உக்காத கழிவுப் பொருட்களை முறையாக அகற்றுதல் வேண்டும். |